*கவனிக்க.-2022.06.24 ஆந் திகதிய 2286 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2287 - 2022 ජූලි මස 01 වැනි සිකුරාදා - 2022.07.01

*2287 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | 1000 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1000 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, யூலை மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூலை மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# அரசாங்க அறிவித்தல்கள்

## கம்புறுபிட்டிய சப்புகொட வருடாந்த எசல பெரஹரா - 2022

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் கம்புறுபிட்டிய சபுகொட இலங்கம்கொட புராண ரஜ மகா விகாரையின் (சபுகொட பிரிவென வித்தியாபீடம்) 2022 வருடாந்த எசல மகா பெரஹரா 2022, யூலை மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் 2022, யூலை மாதம் 24 ஆந் திகதி வரை நடைபெறும் என்பதை யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் (175 ஆம் அத்தியாயத்தின்) கீழ் ஏற்படுத்தப்பட்டு 1984 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 308 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கேற்ப இதன் மூலம் அறியத்தருகிறேன்.

குஸலக்க நாணாயக்கார,
பிரதேச செயலாளர்,
கம்புறுபிட்டிய.

கம்புறுபிட்டிய பிரதேச செயலகத்தில்,
2022, யூன் 15.

07-23

---

## யாத்திரிகள் கட்டளைச் சட்டம்

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் தெவுந்தறை ஸ்ரீ விஷ்ணு மஹா தேவாலயத்தின் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த எசல உற்சவம் 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் என்பதை யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் படி 1959, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வழங்கப்பட்ட 11959 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் அறியத்தருகிறேன்.

வை. விக்ரமசிறி,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
மாத்தறை.

மாத்தறை மாவட்டச் செயலகத்தில்,
2022, யூன் 22.

07-45

---

## ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் - 2022

முல்லைத்தீவு மாவட்டம்

மேற்படி உற்சவம் 2022 ஆம் ஆண்டின் யூன் மாதம் 28 ஆந் திகதி மு. ப 6.00 மணிக்கு ஆரம்பமாகி 2022 ஆம் ஆண்டின் யூலை மாதம் 13 ஆந் திகதி பி.ப 6.00 மணிக்கு முடிவடையும் என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

1. 1949.05.27 ஆந் திகதி 9978 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியிலும், 1950.05.26 ஆந் திகதி 10105 ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் பொதுமக்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

2. மேற்கூறப்பட்ட கட்டளைகள் இவ் உற்சவத்தின் போது அமுல்படுத்தப்படும்.

ப. ஜெயராணி,
பிரதேச செயலாளர்,
ஒட்டுசுட்டான்.

2022, யூன் 20.

07-46

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

பொத்துபிட்டியகே சேனாதி வசந்த குமார பர்னாந்து மற்றும் பஹலகே எனும் பல்லகே குமுதுனி தம்மிகா திஸாரத்ன
கிளை : களுத்துறை

மேற்படி தீர்மானமானது, 2022.04.26 ஆந் திகதி 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

"கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான" பொத்துபிட்டியகே சேனாதி வசந்த குமார பர்னாந்து மற்றும் கடப்பாடுடையவரான பஹலகே எனும் பல்லகே குமுதுனி தம்மிகா திஸாரத்ன ஆகியோர் பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு A.V.N சந்திமா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2016.08.08 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 417 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால்;

பேன் ஏசியா வங்கி (கூட்டுத்தாபனம்) பீஎல்சீ (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) சொல்லப்பட்ட ஈட்டுமுறி இல. 417 இற்கு அமைய 2022.03.31 ஆந் திகதியிலிருந்து ஆரம்ப பணத்தொகையான ரூபா 7,321,437.68 இற்கு 16% வருடாந்த வட்டியுடன் சேர்த்து 2022.04.01 ஆந் திகதியில் எட்டு மில்லியன் இருநூற்று தொண்ணூற்று மூவாயிரத்து எழுநூற்று மூன்று ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூபா 8,293,703.79) ஆகவும் மற்றும் 2022.03.31 ஆந் திகதியிலிருந்து ஆரம்ப பணத்தொகையான ரூபா 1,210,732.00 இற்கு 8.11% வருடாந்த வட்டியுடன் சேர்த்து 2022.04.01 ஆந் திகதியில் ஒரு மில்லியன் இருநூற்று எழுபத்தோராயிரத்து எழுபத்தேழு ரூபா நாற்பத்து மூன்று சதம் (ரூபா 1,271,077.43) எனும் பணத்தொகையானது தற்போது வரவேண்டியும், சேரவேண்டியுமுள்ளது.

இதன் மூலம் தீர்மானிக்கப்படுவதாவது:- .

மேற்சொல்லப்பட்ட பணத்தொகையான ஒன்பது மில்லியன் ஐந்நூற்று அறுபத்து நான்காயிரத்து எழுநூற்று எண்பத்தொரு ரூபா இருபத்து இரண்டு சதம் (ரூபா 9,564,781.22) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணங்கள், செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதிவரையான வட்டியுடனும் சேர்த்து எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள பொத்துபிட்டியகே சேனாதி வசந்த குமார பர்னாந்து மற்றும் பஹலகே எனும் பல்லகே குமுதுனி தம்மிகா திஸாரத்ன ஆகியோரினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள ஈட்டு முறி இல. 417 இன் ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொலன்னாவை, விஹார மாவத்தை, இல. 182/3, (50/3) ஐச் சேர்ந்த உரிமம் பெற்ற ஏலதாரர் துசித் கருணாரத்ன என்பவருக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கின்றதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், (பாணந்துறை பதிவு பிரிவிற்குள்) களுத்துறை மாவட்டம், வாத்து வஸ்கடு தெபெத்தயின் பாணந்துறை தொட்டமுன, களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, இல. 708C - பொத்துபிட்டிய கிராம அலுவலர் பிரிவு, பொத்துபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள கொழும்பு பாதை இடது பக்கம், வரிப்பண இல. 853 இல் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கிய "மாவத்தபொடவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜீ. எஸ். பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1988, ஏப்பிறல் 24 ஆந் திகதிய வரைபட இல. 2991 இல் விபரிக்கப்பட்டுள்ள தொடர் காணித்துண்டுகள் 1 மற்றும் 2 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டுகள் 1 மற்றும் 2 இன் எல்லைகளாவன - வடக்கு: கலகஹவத்த மற்றும் வரைபட இல. 405 இன் காணித்துண்டு 1; கிழக்கு: வரைபட இல. 405 இன் காணித்துண்டு 1 மற்றும் பிரதான வீதி; தெற்கு: வரைபட இல. 405 இன் காணித்துண்டு 3 மற்றும் மேற்கு: வரைபட இல. 405 இன் காணித்துண்டு 2 மற்றும் இக்காணியானது சொல்லப்பட்ட வரைபட இல. 2991 இற்கு அமைய ஒரு றூட் நான்கு தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சஸ் (00ஏ. 01றூ. 4.60பே.) விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன், பாணந்துறை காணி பதிவகத்தில் தொகுதி/ பக்கம் C 78/107 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேவிகா ஹல்வத்துர,
முகாமையாளர் - அறவீடுகள்.

07-36

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கடதொர கெதர லலித் நிஷாந்த பண்டார, வெதராலலே கெதர குமுதுனி மெனிக்கே திஸ்ஸாநாயக்க மற்றும் கோன கெதர ஹீன் அம்மா.

கிளை : கதுருவெல

மேற்படி தீர்மானமானது, 2022.04.26 ஆந் திகதி 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

"கடப்பாடுடையவரான" கடதொர கெதர லலித் நிஷாந்த பண்டார, வெதராலலே கெதர குமுதுனி மெனிக்கே திஸ்ஸாநாயக்க மற்றும் கோன கெதர ஹீன் அம்மா மற்றும் ஈடுவைத்தவரான கோன கெதர ஹீன் அம்மா ஆகியோர் பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ இன் சார்பில் 00260000119: பொலன்னறுவை எனும் இலக்கத்தையுடைய உரித்துச் சான்றிதழின் கீழ்

பொலன்னறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு A. A. அபேவர்தன அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.09.21 ஆந் திகதிய 2395, 2017.07.31 ஆந் திகதிய 3075 மற்றும் 2018.08.03 ஆந் திகதிய 3457 ஆகிய ஈட்டுமுறிகளின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால்;

பேன் ஏசியா வங்கி கோப்பரேஷன் பீஎல்சீ (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு வரவேண்டியும் சேரவேண்டியும் உள்ளது.

சொல்லப்பட்ட 00260000119: பொலன்னறுவை எனும் இலக்கத்தையுடைய உரித்துச் சான்றிதழின் கீழ் 2395, 3075 மற்றும் 3457 எனும் இலக்கங்களையுடைய ஈட்டுமுறிக்கான பணத்தை செலுத்தி முடிக்கும் வரை;

1. 2022, மாச்சு 31 ஆந் திகதி வரையான ஐந்து மில்லியன் இருநூற்று அறுபத்து மூவாயிரத்து நானூற்று ஐம்பத்தேழு ரூபா அறுபது சதம் (ரூபா 5,263,457.60) எனும் ஆரம்ப பணத்தொகையானது 15% வருடாந்த வட்டியுடன் சேர்த்து 2022, ஏப்பிறல் 01 ஆந் திகதிக்கு ஐந்து மில்லியன் முந்நூற்று எண்பத்தேழாயிரத்து ஐந்நூற்று பன்னிரெண்டு ரூபா ஆறு சதம் (ரூபா 5,387,512.06) ஆகவும்,

2. 2022, மாச்சு 31 ஆந் திகதி வரையான இருநூற்று இருபத்தெட்டாயிரத்து இருநூற்று இருபத்தொரு ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூபா 228,221.38) எனும் ஆரம்ப பணத்தொகையானது 2% வருடாந்த வட்டியுடன் சேர்த்து 2022, ஏப்பிறல் 01 ஆந் திகதிக்கு இரு நூற்று இருபத்தெட்டாயிரத்து இருநூற்று எழுபத்தெட்டு ரூபா எண்பத்தொரு சதம் (ரூபா 228,278.81) ஆகவும் வரவேண்டியும் சேரவேண்டியுமுள்ளது.

இதன் மூலம் தீர்மானிக்கப்படுவதாவது:- .

மேற்சொல்லப்பட்ட பணத்தொகையான ஐந்து மில்லியன் அறுநூற்று பதினைந்தாயிரத்து எழுநூற்று தொண்ணூறு ரூபா எண்பத்தேழு சதம் (ரூபா 5,615,790.87) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணங்கள், செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதிவரையான வட்டியுடன் சேர்த்து எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொழும்பு 02, புதுக்கடை வீதி, 02 ஆம் மாடி, இல. 200 ஐச் சேர்ந்த உரிமம் பெற்ற ஏலதாரர் L. B. சேனாநாயக்க என்பவருக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கின்றதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், மெதிரிகிரிய பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர், சிங்ஹல பத்துவ, பிசோ உயன - இல. 89 கிராம அலுவலர் பிரிவு, தியசென்புர கிராமத்தில் அமைந்துள்ள காணி நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கெடஸ்ரல் வரைபட இல. 120041, வட்டார இல. 05 இல் அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு 129 இன் எல்லைகளாவன வடக்கு: காணித்துண்டு 130; கிழக்கு: காணித்துண்டு 133 - பாதை; தெற்கு: காணித்துண்டு 134 மற்றும் மேற்கு: காணித்துண்டு 128 மற்றும் 127 மற்றும் இக்காணியானது பூச்சியம் தசம் ஆறு எட்டு ஐந்து நான்கு ஹெக்டயார் (ஹெக். 06854) விஸ்தீரணத்தையும் 00260000119 பொலன்னறுவை எனும் இலக்கத்தையுடைய உரித்துச் சான்றிதழின் மூன்றாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

அருண குருகே,
உதவி முகாமையாளர் - அறவீடுகள்.

07-37

---

## பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

மியனகொலதென்ன ஹேவகே பிரசன்ன குணதிலக்க

கிளை : அநுராதபுரம்

மேற்படி தீர்மானமானது, 2022.04.26 ஆந் திகதி 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

"கடப்பாடுடையவரான/ ஈடுவைத்தவரான மியனகொல தென்ன ஹேவகே பிரசன்ன குணதிலக்க பீகியூ 48 ஐக்

கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ இன் சார்பில் அநுராதபுரத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு A.V.A திஸ்ஸாநாயக்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.07.16 ஆந் திகதிய ஈட்டுமுறி இல. 8067 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால்;

பேன் ஏசியா வங்கி பீஎல்சீ (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) சொல்லப்பட்ட ஈட்டுமுறி இல. 8067 இற்கு அமைய 2022, மாச்சு 31 ஆந் திகதியில் இருந்து கொடுப்பனவு திகதி வரை ஆறு மில்லியன் ஐம்பத்து மூவாயிரத்து முப்பத்தைந்து ரூபா பதினேழு சதம் (ரூபா 6,053,035.17) பணத்தொகைக்கு 18% வருடாந்த வட்டியுடன் சேரத்து 2022, ஏப்பிறல் 01 ஆந் திகதியிலிருந்து ஆறு மில்லியன் ஐந்நூற்று பத்தாயிரத்து இருநூற்று எழுபது ரூபா அறுபத்து இரண்டு சதம் (ரூபா 6,510,270.62) தற்போது வரவேண்டியும், சேரவேண்டியுமுள்ளது.

இதன் மூலம் தீர்மானிக்கப்படுவதாவது:- .

மேற்சொல்லப்பட்ட பணத்தொகையான ஆறு மில்லியன் ஐந்நூற்று பத்தாயிரத்து இருநூற்று எழுபது ரூபா அறுபத்து இரண்டு சதம் (ரூபா 6,510,270.62) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணங்கள், செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதி வரையான வட்டியுடன் சேர்த்து எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொழும்பு 02, புதுக்கடை வீதி, 02 ஆம் மாடி, இல. 200 ஐச் சேர்ந்த உரிமம் பெற்ற ஏலதாரர் L. B. சேனாநாயக்க என்பவருக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கின்றதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், நுவரகம் பலாத்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவு, கனாதர கோரளை - இல. 241 கிராம அலுவலர் பிரிவு, தம்மன்னபுர கிராமத்தில் அமைந்துள்ள (உரிமம் பெற்ற நில அளவையாளர் லியனகே சிறிபால அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1999.07.03 ஆந் திகதிய வரைபட இல. 425 இன் ஒன்றிணைக் கப்பட்ட காணித்துண்டுகள் 4 மற்றும் 5) உரிமம் பெற்ற நில அளவையாளர் பிரியந்த சமரதுங்க அவர்களினால் தயாரிக்கப் பட்ட 2014.06.28 ஆந் திகதிய வரைபட இல. 2014/ 206 இல் அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட அரச காணி- காணித்துண்டு 1 இன் எல்லைகளாவன - வடக்கு: பாதை ஒதுக்கீடு (RDA) மற்றும் கே. ஏ. எச். சோமதிலக்கவின் காணி (வரைபட இல. 425 இன் காணித்துண்டுகள் 2 மற்றும் 3); கிழக்கு: கே. ஏ. எஸ். சோமதிலக்க மற்றும் கே. ஏ. சோமதிலக்கவின் காணிகள் (வரைபட இல. 425 இன் காணித்துண்டுகள் 2 மற்றும் 3); தெற்கு: கே. ஏ. சோமதிலக்க மற்றும் கே. ஏ. யூ. அமரசிங்ஹ என்பவர்களின் காணிகள் (வரைபட இல. 425 இன் காணித்துண்டுகள் 6 மற்றும் 7) மற்றும் மேற்கு: கே. ஏ. யூ. அமரசிங்ஹ என்பவர்களின் காணி (வரைபட இல. 425 இன் காணித்துண்டுகள் 6 மற்றும் 7) மற்றும் பாதை ஒதுக்கீடு (RDA) மற்றும் இக்காணியானது ஒரு ஏக்கர் பதினைந்து பேர்ச்சஸ் (01ஏ. 00றூ. 15பே.) அல்லது பூச்சியம் தசம் நான்கு நான்கு நான்கு பூச்சியம் ஹெக்டயார் (ஹெக். 0.4440) விஸ்தீரணத்தையும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளதுடன், இக்காணியானது அநுராதபுரம் மாவட்ட காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் LDO D 9/28 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

அருண குருகே,
உதவி முகாமையாளர் - அறவீடுகள்.

07-38

---

**மக்கள் வங்கி – நிட்டம்புவ கிளை (278)**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஈ (29D) பிரிவின் கீழான தீர்மானம்*

கிளை : நிட்டம்புவ கிளை (278)

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2021.10.29 ஆந் திகதி நடைபெற்ற அவர்களின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. எல். விஜேசிரிவர்தன அவர்களால் முறையாக 2011.12.01, 2012.10.16 மற்றும் 2014.09.10 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 18833, 20282 மற்றும் 22178 இலக்கங்களைக் கொண்ட ஈட்டு முறிகளின் பிரகாரம் மற்றும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு டீ. எஸ். லோரன்ஸ் அவர்களால் 2017.07.25 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11275 ஈட்டு முறியின் பிரகாரம்

வருமதியான கொடுப்பனவில் செலுத்தக் கடமைப்பட்டவர்களான மல்லிகா அப்புஹாமிலாகே நெவில் உதய குமார கேரகல மற்றும் பதிரன்னஹலாகே அனுலா சிரியானி என்பவர்கள் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட முறியின் கீழ் தற்போது எழுபத்தி மூன்று இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து எட்டு ரூபா தொண்ணூற்றி ஏழு சதம் (ரூபா 73,49,008.97) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. மேலும் ஐம்பத்து ஐயாயிரத்து எழுநூற்றி பன்னிரண்டு ரூபா எழுபத்தி எட்டு சதம் (ரூபா 55,712.78) பணத்தொகைக்காக 2021.08.17 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 17% வருடாந்த வட்டியுடனும் பத்தொன்பது இலட்சத்து பதினையாயிரத்து நானூற்றி ஒன்பது ரூபா முப்பத்தி ஆறு சதம் (ரூபா 19,15,409.36) பணத்தொகைக்காக 2021.08.17 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 17.50% வருடாந்த வட்டியுடனும் மற்றும் நாற்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரம் ரூபா ஐந்து சதம் (ரூபா 43,59,000.05) பணத்தொகைக்காக 2021.08.17 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 18% வருடாந்த வட்டியுடன் தற்போது எழுபத்தி மூன்று இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து எட்டு ரூபா தொண்ணூற்றி ஏழு சதம் (ரூபா 73,49,008.97) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் "29L" பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பணங்களும் கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டு இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட எழுபத்தி மூன்று இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து எட்டு ரூபா தொண்ணூற்றி ஏழு சதம் (ரூபா 73,49,008.97) பணமும் அந்தப் பணத்திற்கான வட்டித்தொகையும் கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டு இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட பணத்தொகைகளை அறவிடுவதற்கு முறையே கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. எல். விஜேசிரிவர்தன அவர்களால் முறையாக 2011.12.01, 2012.10.16 மற்றும் 2014.09.10 ஆந் திகதிகளில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 18833, 20282 மற்றும் 22178 இலக்கங்களைக் கொண்ட ஈட்டு முறிகளின் பிரகாரம் மற்றும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு டீ. எஸ். லோரன்ஸ் அவர்களால் 2017.07.25 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11275 ஈட்டு முறியின் பிரகாரம் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம என்பவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் அதற்குறித்தாக்கப்பட்ட திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், உடுகஹ பத்துவ சியனே கோரளை அத்தனகல்லை பிரதேச சபை எல்லைக்குள் அத்தனகல்லை பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 350 கொண்ட வல்பொல கிராம அலுவலர் பிரிவில் கம்புராகல்ல கிராமத்தில் அமைந்துள்ள "கம்புராகல்ல எஸ்டேட்" எனும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ. சீ. எல். ஜீ. அத்துகோரளை அவர்களால் 2008.08.14 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 3567 எனும் வரைபடத்தில் காணப்படும் இலக்கம் A1 எனப்படும் பிரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கு: பிரதான பாதையும்; கிழக்கு: உடுகஹ வல்பொல மகா வித்தியாலயத்தின் காணியும் ஆர். வீ. சோமவர்தன மற்றும் ஏனையோர்களின் காணியும்; தெற்கு: ஜீ. ஏ. சிரியானி என்பவரின் காணியும் மற்றும் மேற்கு: அதே காணியின் மிகுதிப் பகுதியும் எல்லைகளாக அமைந்த இரண்டு றூட் (00ஏ. 02றூ. 00பே.) விசாலமான காணியும் அதற்குட்பட்ட மரங்கள், பயிர்ச் செய்கைகள், கட்டிடங்கள் அனைத்துமாகும் இந்தக் காணி அத்தனகல்லை காணிப்பதிவகத்தில் இலக்கம் B 179/72 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், உடுகஹ பத்துவ சியனே கோரளை அத்தனகல்லை பிரதேச சபை எல்லைக்குள் அத்தனகல்லை பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 350 கொண்ட வல்பொல கிராம அலுவலர் பிரிவில் கம்புராகல்ல கிராமத்தில் அமைந்துள்ள "கம்புராகல்ல எஸ்டேட்" எனும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ. சீ. எல். ஜீ. அத்துகோரளை அவர்களால் 2008.08.14 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 3567 எனும் வரைபடத்தில் காணப்படும் இலக்கம் A2 எனப்படும் பிரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கு: பாதையும் (வீதி அபிவிருத்தி அதிகார சபை); கிழக்கு: எம். ஏ. என். யூ. கேரகல என்பவரினால் உரிமை கோரப்படும் 3567 வரைபடத்தில் காணப்படும் இலக்கம் A1 கொண்ட காணித்துண்டு; தெற்கு: ஜீ. ஏ. சிரியானி என்பவரினால் உரிமை கோரப்படும் 5825 வரைபடத்தில் காணப்படும் இலக்கம் 1 கொண்ட காணித்துண்டு மற்றும் மேற்கு: ஜீ. ஏ. சிரியானி என்பவரினால் உரிமை கோரப்படும் 5825 வரைபடத்தில் காணப்படும் இலக்கம் 1 கொண்ட காணித்துண்டும் எல்லைகளாக அமைந்த ஒரு ஏக்கர் இரண்டு றூட் (01ஏ. 02றூ. 00பே.) விசாலமான காணியும் அதற்குட்பட்ட மரங்கள், பயிர்ச் செய்கைகள், கட்டிடங்கள் அனைத்துமாகும். இந்தக் காணி அத்தனகல்லை காணிப் பதிவகத்தில் இலக்கம் B 179/ 73 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வரைபடத்தில் காணப்படும் பாதை ஒதுக்கீடும்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள A2 எனப்படும் காணித்துண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணியை மீள அளவிடப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், உடுகஹ பத்துவ சியனே கோரளை அத்தனகல்லை பிரதேச சபை எல்லைக்குள் அத்தனகல்லை பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 350 கொண்ட வல்பொல கிராம அலுவலர் பிரிவில் கம்புராகல்ல கிராமத்தில் அமைந்துள்ள "கம்புராகல்ல எஸ்டேட்" எனும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. ஜயக்கொடி அவர்களால் 2000.09.03 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 5771 எனும் வரைபடத்தில் காணப்படும் இலக்கம் A2 எனப்படும் பிரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு: ருவன்வெல்லையிலிருந்து வேயன்கொடை வரையுள்ள பிரதான பாதையும்; கிழக்கு: இலக்கம் 1 கொண்ட காணித்துண்டும்; தெற்கு: டப்ளியூ. எச். சீ. ஜே. பவுலிஸ் என்பவரினால் உரிமை கோரப்படும் கம்புராகல்லவத்த எனப்படும் காணித்துண்டு மற்றும் மேற்கு: டப்ளியூ. எச். சீ. ஜே. பவுலிஸ் என்பவரினால் உரிமை கோரப்படும் கம்புராகல்லவத்த எனப்படும் காணித்துண்டும் எல்லைகளாக அமைந்த ஒரு ஏக்கர் இரண்டு றூட் (01ஏ. 02றூ. 00பே.) விசாலமான காணியும் அதற்குட்பட்ட மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் அனைத்துமாகும். இந்தக் காணி அத்தனகல்லை காணிப்பதிவகத்தில் இலக்கம் F 310/90 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிராந்திய முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிராந்திய தலைமை அலுவலகம் கம்பஹா,
இல. 131, கண்டி வீதி,
பெலும்மஹர,
முதுன்கொடை.

கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ்.பீ.எல். விஜேசிரிவர்தன அவர்களால் முறையாக 2011.12.01, 2012.10.16 மற்றும் 2014.09.10 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 18833, 20282 மற்றும் 22178 இலக்கங்களைக் கொண்ட ஈட்டு முறிகளின் பிரகாரம் மற்றும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு டீ. எஸ். லோரன்ஸ் அவர்களால் 2017.07.25 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட 11275 ஈட்டு முறியின் பிரகாரம், ஈட்டு முறிகளில் உள்ள உப அட்டவணையுடன் இந்த ஏல விற்பனையுடனும் தொடர்புடைய உப அட்டவணை சரிபார்க்கப்பட்ட பின்னர் சரியென உறுதிப்படுத்துகின்றோம்.

மக்கள் வங்கி,
பிராந்திய தலைமை அலுவலகம் கம்பஹா,
இல. 131, கண்டி வீதி,
பெலும்மஹர,
முதுன்கொடை.

சட்ட அலுவலர்.

07-58

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் அறிவித்தல்*

2022.03.16 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

"1. பிரசித்த நொத்தாரிசு எஸ். எச். ரணவக்க அத்தாட்சிப்படுத்திய 2007.05.16 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2313 மற்றும் பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். டி. சில்வா அத்தாட்சிப்படுத்திய 2014.06.06 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இலக்கம் 4739, 2016.09.20 ஆந்திகதியிட்ட ஈட்டு முறி இலக்கம் 4915 ஆகியவற்றின் பேரில் இல. 25/3, குணசேகர காடுன்ஸ், நாவல வீதி, ராஜகிரிய என்னும் முகவரியிலுள்ள ஹன்சா டிராவல்ஸ் அன்ட் டூவஸ் நிறுவனத்தார் பெற்றுக்கொண்ட இலங்கை வங்கி வீட்டுக் கடன் ரூபா 7,000,000.00 (ஏழு மில்லியன் ரூபா மட்டும்) முதலாவது நிரந்தர மேலதிகப் பற்று ரூபா 7,000,000.00 (ஏழு மில்லியன் ரூபா மட்டும்) இரண்டாவது நிரந்தர மேலதிகப் பற்று ரூபா 7,000,000.00 (ஏழு மில்லியன் ரூபா மட்டும்) என்பவற்றின்மீது 2022.02.09 வரையான வட்டியும் முதலுமாக முறையே ரூபா 3,624,337.59 (மூன்று மில்லியன் அறுநூற்று இருபத்து நான்காயிரத்து முந்நூற்று முப்பத்தேழு ரூபா ஐம்பத்தொன்பது சதம்) ரூபா 12,374,082.19 (பன்னிரண்டு மில்லியன் முந்நூற்று எழுபத்து நான்காயிரத்து எண்பத்திரண்டு ரூபா பத்தொன்பது சதம்) ரூபா 12,056,876.71 (பன்னிரண்டு மில்லியன் ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்று எழுபத்தாறு ரூபா ஐம்பத்தொன்பது சதம்) போன்ற தொகைகளும் அத்துடன் குறித்த இலங்கை வங்கி வீட்டுக் கடன் ரூபா 2,665,744.67, முதலாவது நிரந்தர மேலதிகப் பற்று ரூபா 7,000,000.00 இரண்டாவது நிரந்தர மேலதிகப் பற்று ரூபா 7,000,000.00 என்பவற்றின் முதல் நிலுவை மீது ஆண்டுக்கு முறையே பன்னிரண்டு (12.00%), பதினேழு (17.00%), பதினாறு (16.00%) என்ற வீதத்தில் 2022.02.10 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை திரட்டப்பட வேண்டிய வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளது,

2. மேற்குறிப்பிட்ட 2313, 4739, 4915 ஆகிய இலக்கங் களைக் கொண்ட ஈட்டுமுறிகளின்பேரில் வருமதியாகவுள்ள 28,055,296.49 ரூபாயையும் (இருபத்தெட்டு மில்லியன் ஐம்பத்தைந்தாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றாறு ரூபா நாற்பத்தொன்பது சதம்) அத்துடன் 2022.02.10 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19 ஆம் பிரிவு (397 ஆம்

அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈட்டுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச். ரி. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கித் தலைநகரக் கிளையின் அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வைப் பிரிவின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.".

## முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, மஹரகம கொழும்பு - மஹரகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 525 - தலபத்பிட்டிய கிராம அலுவலர் பிரிவில் 263/1, தலபத்பிட்டிய கோவில் வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்துடன் மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டு தலபத்பிட்டியவில் அமைந்துள்ள "கொடபொரகஹலந்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் என். அபேசிறி தயாரித்த 2004, நவெம்பர் 08 ஆந் திகதிய 2004/97 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 01 என அடையாளமிடப்பட்ட காணி குறித்த வரைபடத்தின்படி - வடக்கு: 263/2, தலபத்பிட்டிய கோவில் வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட கட்டடங்களையும் (உரிமம் பெற்ற நில அளவையாளர் ஓ. எஸ். ரணசிங்க தயாரித்த 1982.09.28 ஆந் திகதியிட்ட 566 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1C எனக் குறிப்பிடப்பட்டுள்ளது); கிழக்கு: 15 அடி அகலங்கொண்ட பாதையையும் (குறித்த 566 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1E எனக் குறிப்பிடப்பட்டுள்ளது); தெற்கு: 15 அடி அகலங்கொண்ட பாதையையும் (குறித்த 566 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1E எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) 263/1A , தலபத்பிட்டிய கோவில் வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட கட்டடங்களையும் (உரிமம் பெற்ற நில அளவையாளர் டப்ளியூ. டி. அபேசிங்க தயாரித்த 1994.10.25 ஆந் திகதியிட்ட 2378A என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் காணித்துண்டு 1C எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) வடிகால் அமைப்பையும் முன்னர் என். ஈ. பெரேராவுக்கும் இப்போது அல்விசுக்கும் சொந்தமாகவுள்ள காணியையும்; மேற்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் ஓ. எஸ். ரணசிங்க தயாரித்த 1982.09.27 ஆந் திகதியிட்ட 565 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 2 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு இருபது தசம் ஐந்து ஒன்று பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 20.51பே.) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து ஒன்று ஒன்பது ஹெக்டயார் (ஹெக். 0.0519) பரப்பளவையும் கொண்டுள்ளது.

காணித்துண்டு 1 என்று அடையாளப்படுத்தப்பட்ட குறித்த காணியானது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்.

263/1, தலபத்பிட்டிய கோவில் வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்துடன் மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டு தலபத்பிட்டியவில் அமைந்துள்ள அமைந்துள்ள "கொடபொரகஹலந்த" என அழைக்கப்படும் காணியின் 566 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 1D என அடையாளமிடப்பட்ட காணி குறித்த வரைபடத்தின்படி - வடக்கு: காணித்துண்டு 1C ஐயும்; கிழக்கு: காணித்துண்டு 1E ஐயும் (15 அடி அகலங்கொண்ட பாதைக்கான ஒதுக்கம்); தெற்கு: காணித்துண்டு 1E ஐயும் ஜி. டி. நந்தவதீ என்பவருக்கும் திரு. பெரேராவின் வாரிசுகளுக்கும் சொந்தமான ஆதனத்தையும்; மேற்கு: அதே காணியின் காணித்துண்டு 2 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இருபது தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 20.10பே.) பரப்பளவைக் கொண்டுள்ள இக்காணி தெல்கந்த காணிப்பதிவகத்தில் B 199/ 75 என்ற இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது."

## இரண்டாம் அட்டவணை

1. மேற்குறிப்பிட்டவாறு தலபத்பிட்டியவில் அமைந்துள்ள "கொடபொரகஹலந்த" என அழைக்கப்படும் காணியின் நில அளவையாளர் ஓ. எஸ். ரணசிங்க தயாரித்த 1982.09.28 ஆந் திகதியிட்ட 566 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 1E (15அடி அகலங்கொண்ட பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிடப்பட்ட காணி வடக்கு: காணித்துண்டு 1A, 1D என்பவற்றையும்; கிழக்கு: எம். அல்பிரட் பெரேரா என்பவரின் ஆதனத்தையும்; தெற்கு: ஜி. டி. சுமணபால என்பவருக்குச் சொந்தமான ஆதனத்தையும் உரிமம் பெற்ற நில அளவையாளர் சி. சி. விக்கிரமசிங்க தயாரித்த 1974.08.17 ஆந் திகதியிட்ட 1604 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 04 ஐயும் ஜி. டி. நந்தவதீ என்பவருக்கும் திரு. பெரேராவின் வாரிசுகளுக்கும் சொந்தமானஆதனத்தையும்; மேற்கு: காணித்துண்டு 1D, 1C, 1B என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 566 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினொன்று தசம் ஐந்து ஐந்து பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 11.55பே.) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி தெல்கந்த காணிப்பதிவகத்தில் B 199/ 77 என்ற இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

1. மேற்குறிப்பிட்டவாறு தலபத்பிட்டியவில் அமைந்துள்ள "மதட்டியகஹவத்த" என அழைக்கப்படும் காணியின் நில அளவையாளர் சி. சி. விக்கிரமசிங்க தயாரித்த 1974.08.17 ஆந் திகதியிட்ட 1604 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 04 (10 அடி அகலங்கொண்ட பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிடப்பட்ட காணி - வடக்கு: ஜி. டி. ஜினரிஸ் என்பவருக்குச் சொந்தமான காணியையும்; கிழக்கு: காணித்துண்டுகள் 1, 2, 3 என்பவற்றையும்; தெற்கு: கிராம சபை வீதியையும் (தற்போது தலபத்பிட்டிய கோவில் வீதி என அழைக்கப்படுகிறது); மேற்கு: அதே காணியின் ஒரு பகுதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 1604 ஆம்

இலக்க வரைபடத்தின்படி ஒன்பது தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 9.60பே.) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி தெல்கந்த காணிப்பதிவகத்தில் B 199/76 என்ற இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டப்ளியூ. எம். எச். ஏ. எஸ். எஸ். பி. ஏக்கநாயக்க,
முதுநிலை முகாமையாளர்
அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை.

இலங்கை வங்கி,
தலைநகரக் கிளை.

07-27

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கிளை : புத்தளம்
வேல்ட் எக்ஸ்பிரஸ் கொன்ஸ்சல்டிங் கோப்பரேஷன் கொழும்பு (பிரைவேட்) லிமிட்டட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2022, மே 26 ஆந் திகதி அன்று இடம்பெற்ற கூட்டத்தில் விஷேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

